# ஆய்வுச் சுருக்கம்

அதிபர்களின் போதனா தலைமைத்துவம் தொடர்பான இவ்வாய்வானது புத்தளம் கல்வி வலயத்தை மையப்படுத்தியதாக அமைந்துள்ளது. அதிபர் போதனா தலைவர் என்ற வகையில் வகுப்பறைக் கற்றல் மற்றும் கற்பித்தலின் தலைவராக விளங்குதல் அவசியமாகின்றது. எனவே அதிபர், ஆசிரியர்கள் மற்றும் கல்வி சார் அலுவலர்கள் ஆகியோரின், போதனா தலைமைத்துவம் தொடர்பான புலக்காட்சியை அறிவதோடு அதிபர்களால் வெளிப்படுத்தப்படும் தலைமைத்துவ நடத்தைகள் மற்றும் அவர்களால் மாணவர் அடைவு மட்ட விருத்தியின் பொருட்டு மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் என்பவற்றைக் கண்டறிந்து போதனா தலைமைத்துவம் தொடர்பான விதந்துரைகளை முன்வைப்பதே இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும். அப்பிரதான நோக்கத்தை அடைவதற்காக பின்வரும் செயற்பாடுகள் ஆய்வாளரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆவை: போதனா தலைமைத்துவம் தொடர்பான அதிபர்களின் புலக்காட்சியினை மதிப்பிடல், போதனா தலைமைத்துவம் தொடர்பான கல்விசார் ஆளணியினரின் புலக்காட்சியினைக் கண்டறிதல், புத்தளம் வலய பாடசாலை அதிபர்கள் மத்தியில் காணப்படுகின்ற போதனா தலைமைத்துவ மாதிரிகளைப் பட்டியற்படுத்துதல்,iv. மாணவர்களின் அடைவு மட்டத்தில் அதிபரின் போதனா தலைமைத்துவத்தின் வகிபங்கினை மதிப்பீடு செய்தல் மற்றும் அதிபர்களின் போதனா தலைமைத்துவத்தை மேம்படுத்துவது தொடர்பான விதந்துரைகளை முன்வைத்தல் என்பனவாகும்.

இவ்வாய்வில் கலப்பு ஆய்வு முறை பின்பற்றப்பட்டுள்ளது. நிகழ்தகவான படையாக்கப்பட்ட மாதிரி எடுப்பு முறையில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் இருந்து 33 அதிபர்கள் வினாக்கொத்துக்கு விடையளித்ததுடன் அவர்களிடமிருந்து முறையில் உரையாடல்கள் மூலமும் தகவல்கள் பெறப்பட்டன. மேலும் தகவல்களை உறுதி செய்துகொள்ளும் பொருட்டு 20 ஆசிரியர்கள் மற்றும் 10 கல்வி சார் அலுவலர்கள் நேர்காணலுக்கு உட்படுத்தப்பட்டனர். திரட்டப்பட்ட அளவு சார் தரவுகள் SPSS Ver. 18 மென்பொருள் துணையுடன் மாறளவுப் பகுப்பாய்வு முறை (ANOVA) மற்றும் பின் கூற்று பரீட்சை (Post Hoc Tests ) முறையில் பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் கண்டறியப்பட்டன.

ஆய்வின் முடிவில் அதிபர்கள் போதனா தலைமைத்துவம் தொடர்பாக உடன்பாடான புலக்காட்சியினைக் கொண்டுள்ளமை தெளிவாகியது. விசேடமாக 1C மற்றும் Type 2 பாடசாலைகளின் அதிபர்கள் போதனா தலைமைத்துவத்தை அதிகம் முன்னிறுத்தியுள்ளமையும் மாணவர் அடைவு மட்ட அதிகரிப்பிற்கான அதிபரின் பங்களிப்புக்கள் நேரடியற்ற வகையில் உள்ளமையும் கண்டறியப்பட்டுள்ளது. இருப்பினும் வகுப்பறை மேற்பார்வை தாழ்ந்த மட்டத்தில் காணப்படுவதுடன் மாணவர் முன்னேற்றம் பற்றிய கண்காணிப்பும் குறைவாக உள்ளன. அவற்றை மேம்படுத்துவதனூடாக சிறந்த போதனா தலைமைத்துவம் வழங்கப்படலாம் என்ற பிரேரணையும் முன்வைக்கப்பட்டுள்ளது.